கிடக்கும் நெருக்கடி நிலை பற்றி, அந்த நிலையைப் போக்குவதற்கு அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கோரி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அரசினுடைய அன்றாட அலுவல்களுக்கு உட்பட்ட காரணத்தாலும், இதை விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தாலும் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் சில கல்லூரிகளில் மாணவர்கள் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. டி. மார்டின் அவர்கள், இராமநாதபுரம், சிவகங்கை, திருப்பத்தூர், விருதுநகர், காரைக்குடி ஆகிய நகரங்களிலிருக்கும் கல்லூரிகளில் மாணவர்கள் வேலை நிறுத்தம் ஏற்பட்டிருப்பது பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்க வேண்டுமென்று கோரி, ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். வேலைநிறுத்தம் குறித்து விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டியதில்லையென்று விதிகளில் உள்ள காரணத்தால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) சென்னை நந்தம்பாக்கத்திலுள்ள அறுவைச் சிகிச்சை கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலை கதவடைப்பும், அங்குள்ள பள்ளி மூடப்பட்டதும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் சென்னை நந்தம்பாக்கத்திலுள்ள மத்திய அரசின் நிறுவனமான அறுவை சிகிச்சைக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலையின் நிர்வாகம் கதவடைப்பு செய்திருப்பதோடு, அங்கே இருக்கும் பள்ளிக்கூடத்தையும் மூடிவிட்டதனால் தொழிலாளர்கள் வேலை இல்லாமலும் மாணவர்கள் படிக்க முடியாமலும் இருக்கும் நிலையை விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். கதவடைப்பு, வேலை நிறுத்தம் போன்றவைகளை விவாதிப்பதற்காக அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டியதில்லையென்று நம்முடைய விதிகள் கூறுகின்ற காரணத்தால், இதற்கும் நான் அனுமதி தர மறுக்கிறேன்.

அடுத்து, ஒரு . . . .

(3) தகவல் கோரல்

காவிரி ஆற்று நீர்ப் பங்கீடு பற்றிய விவர அறிக்கை குறித்து.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அண்மையிலே காவேரித் தண்ணீரை மைசூர் சர்க்கார் எடுத்துக்கொள்ள முடிவெடுத்ததாகவும் அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று விவாதித்ததாகவும்ம் சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டினுடைய பாசனம் பாதிக்கப்படும் வகையிலும், எதிர்காலத்தில், விவசாயம்

பாதிக்கப்படும் வகையிலும், காவேரி நீரை அவர்கள் எடுத்துக் கொள்ளப்போவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, காவேரி நதி நீர்ப் பங்கீடு திட்டத்தைப் பற்றி மத்திய சர்க்காரினுடைய நிலை என்ன? நம்முடைய சர்க்கார் நிலை என்ன என்பவற்றை விளக்கும் அறிக்கை இங்கு வைக்கப்படவில்லை யென்று தெரிகிறது. அதை எப்பொழுது வைப்பார்கள்? எப்பொழுது தமிழ்நாட்டு சர்க்காரி னுடைய திட்டம் இது என்று விளக்கமாகச் சொல்லி அறிக்கை வைப்பார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இது சம்பந்தமாக நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் டெல்லியிலே மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சரையும், பிரதம அமைச்சரையும் சந்தித்து நம்முடைய குறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களும் இது சம்பந்தமான நடவடிக்கைகள் எடுப்பதாகக் கூறி இருக்கிறார்கள். இந்தக் கட்டத்திலேயே இது சம்பந்தமாக சட்டமன்றத்திற்கு விவரமான, விரிவான அறிக்கை அளிப்பது பொது நலனுக்கு உகந்ததா என்பது ஒரு கேள்வி. அதன்மூலம் இந்தப் பிரச்னைக்கு ஒரு சுமுகமான முடிவு காண்கிற நிலைமைகள் பாதிக்கப்படுமா என்பதைப்பற்றி யோசிக்கவேண்டி யிருக்கிறது. ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இருக்கிற சிரத்தையை, அக்கறையை இந்த அரசாங்கம் பாராட்டுகிறது. 1974-வது வருடம் முடிய, நம்முடைய ஒப்பந்தம் இருக்கிறது. மைசூர் அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலே, மத்திய அரசாங்கத்தையும் கேட்காமல், மற்றவர் களையும் கேட்காமல், சில வேலைகளுக்கான சில குறிப்புகளை அவர்களாகவே, தன்னிச்சையாகவே, தயாரித்து, வேலைகளை மேற்கொள்ள முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இது முறையானது அல்ல. இவை இரண்டு மாநிலங்களுக்குரிய உறவுகளையும், அவர்களுடைய உரிமைகளையும் கூட மரியாதைப் படுத்துவது ஆகாது. இருந்தாலும், அண்டை மாநிலங்கள் ஒற்றுமையாக இருந்து கவனிக்க வேண்டிய காரியமாக இருக்கிற காரணத்தினால், இதனால் ஏற்படுகிற பொறுப்புகளையும் நமக்கு ஏற்படக்கூடிய விளைவுகளையும் குறித்து பிரதம மந்திரி அவர்களிடத்திலே முறையிடப்பட்டிருக்கிறது. மத்திய நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் முறையிடப் பட்டிருக்கிறது. அதைக் கொண்டு அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கிறேன் என்று கூறிய காரணத்தினால், அதை அமைச்சர் அவர்களிடத்தில் இந்தக் கட்டத்தில் விட்டு விட வேண்டுமென்றும் தமிழ்நாட்டினுடைய நலன்கள், தமிழ்நாட்டுக்குரிய பாத்தியதை கள் இவைகளைப் பெறுவதற்கு அரசாங்கம் மிகுந்த சிரத்தையுடன் பணியாற்றும் என்றும் அறிவிக்கிறேன்.